கிட்டத்தட்ட *5,000* பொதுமக்கள் கூடி, அந்தச் சிலையை எடுக்கக்கூடாது என்று கூறியதற்குப் பிறகு, அதிகாரிகள் கட்சிக்காரர்களையெல்லாம் அழைத்து, பேச்சுவார்த்தை நடத்திய பின்பு, அந்த இடத்திலே சிலை இருக்கட்டும் என்று மாவட்ட ஆட்சியாளர் அவர்களும், காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களும் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், அன்று இரவு, இரவோடு இரவாக, நெடுஞ்சாலைத் துறையினர் அந்தச் சிலையை அகற்றியிருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடம் சென்று மலர் வளையம் வைக்கின்றார்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய சிலைக்கு மாலை அணிவிக்கின்றார்கள். இந்தக் காலகட்டத்திலே நீங்கள் அந்தச் சிலையை எதற்காக அகற்றினீர்கள்? நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டுத்தான் சிலை அகற்றப்பட்டது என்றுகூடக் கூறினார்கள். இருந்தாலும், அதை நான் நம்பவில்லை. அவர்கள் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, ஆட்டையாம்பட்டிப் பேரூராட்சியில், அந்த இடத்தில் உடனடியாக அந்தச் சிலையை நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், ஆட்டையாம்பட்டி பேரூராட்சித் தலைவர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதையும் வீரபாண்டி ஒன்றியத்திலே உள்ள ஊராட்சி மன்றத் தலைவரும் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்தான் என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இந்த இடத்திலே உடனடியாக அந்தச் சிலையை அமைப்பதற்கு ஆணையிட்டு, பொதுமக்களுடைய கோபத்தைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'அமைச்சர் தலையீடு காரணமாகத்தான்' என்று உறுப்பினர் சொல்லக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை வைப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கடந்த கால ஜெயலலிதா தலைமையில் இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப்போல நடந்து கொள்ளாது என்பதை இந்த அவைக்கு நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்

ஒலி) எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை வைக்க இன்றைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக சட்டமன்றத்திலே வீற்றிருக்கின்ற திருநாவுக்கரசு அவர்கள் என்ன பாடுபட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கியிலே வைத்த எம்.ஜி.ஆர். சிலையை நானே திறந்து வைத்தேன். ஆனால் அதற்கு முன்பு எவ்வளவு கஷ்டங்களை அவர் அனுபவிக்க நேர்ந்தது என்பதை நான் மிகமிக நன்றாக அறிவேன். எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை வைப்பதில், அது உரிய இடத்தில், உரிய நேரத்தில், உரிய முறையில் வைக்கப்பட வேண்டும் என்பதுதான் நான் இங்கே எடுத்துக் கூறுகின்ற கருத்தாகும். எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை மாத்திரமல்ல; எந்தத் தலைவருடைய சிலையாக இருந்தாலும், சிலை வைக்கிறோம் என்கின்ற பெயரால், அந்தத் தலைவர்களை நம்மை அறியாமலேயே, இழிவுபடுத்துகின்ற காரியத்திலே நாம் இறங்கக் கூடாது.

முற்பகல் 10-35

எனக்கு வந்துள்ள தகவலின்படி, 17-1-1997 அன்று, பொழுது விடிவதற்கு முன்பாக, நள்ளிரவில், எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், ஆட்டையாம்பட்டி, மாகாளிப்பட்டி சாலை சந்திப்பில், காவல் நிலையத்திற்கு எதிரே, சிமெண்டால் செய்யப்பட்ட எம்.ஜி.ஆர். சிலை ஒன்று, சாலையின் மத்தியிலே கொண்டுவந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலையை, முன்னறிவிப்பு ஏதும் இல்லாமல், யாருடைய அனுமதியையும் கேட்காமல் வைத்து விட்டார்கள். அதற்குப் பிறகு, அந்தச் செய்தியை அறிந்து, அதிகாரிகள் சிலை வைத்தவர்களை அழைத்து விசாரித்தபோது, "நாங்கள் இந்தச் சிலையை இங்கே நிறுவ, 1995-ஆம் ஆண்டிலேயே அனுமதி கோரியிருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார்கள். 1995-ஆம் ஆண்டு அனுமதி கோரி, அது கிடைக்கவில்லை என்றால், அப்போது யாருடைய ஆட்சி நடைபெற்றது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை. பிறகு, அதிகாரிகள், "நீங்கள் அனுமதி கோரி கொடுத்த கடிதத்தின் நகல் இருந்தால், கொண்டு வாருங்கள்" என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் அவர்கள் யாரும் கொண்டு வரவில்லை. சிலை வைக்கப்பட்ட இடம் — சிமெண்ட் சிலை வைக்கப்பட்ட இடம் — போக்குவரத்திற்கு மிகமிக நெருக்கடியான இடம். எனவேதான் அது மறுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல; சிலையை அங்கே வைத்துவிட்டு, அங்கே ஒரு 'டி.வி.' பெட்டியையும் வைத்து, படமும் காட்ட ஆரம்பித்து — திரைப்படம் காட்ட ஆரம்பித்து — கூட்டமும் சேர்க்கப்பட்டது. எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே

எடுத்துக் காட்டியதைப்போல, அதிகாரிகள் ஏறத்தாழ 4 மணி நேரம் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, "சிலையை அகற்றி விடுங்கள், பிறகு, வேறோர் இடத்திலே, அரசு அனுமதிக்கிற இடத்திலே, நெடுஞ்சாலைத் துறையும், பொதுப்பணித் துறையும் அனுமதிக்கின்ற இடத்திலே, சிலை வைக்கலாம்" என்று சொல்லியுங்கூட, கேட்காமல் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு, அந்தச் சிலை அகற்றப்பட்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை வைக்கக் கூடாது என்பது அரசினுடைய நோக்கமல்ல. எம்.ஜி.ஆர். சிலை ஒழுங்கான முறையில், உரிய முறையில், விதிமுறைகளுக்குட்பட்டு வைக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சிலையைப் பற்றிச் சொல்லும்போது, ஒன்றைக் குறிப்பிட வேண்டியது அவசியம். கோவை மாநகரத்தில், அண்ணா அவர்களுடைய சிலையை நிறுவுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் சார்பில், நான் முதலமைச்சராக இருந்தபோது — கடந்த காலத்திலே முதலமைச்சராக இருந்தபோது — அண்ணா சிலை ஒன்று வைக்கப்பட்டது. அந்தச் சிலை, கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ஒரு லாரி மோதி, உடைக்கப்பட்டது ; சுக்குநூறாக ஆகிவிட்டது. அதே இடத்திலே, அண்ணா சிலையை வைக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எத்தனையோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சிலையும் செய்யப்பட்டு, ஓராண்டுக் காலம் அந்தச் சிலை கோவைக்கு எடுத்துச் செல்லப்படாமல், அனுமதி கிடைக்காத காரணத்தினால், சென்னையிலேயே இருந்தது. நாங்கள் கோரிய இடத்திலே அந்தச் சிலையை வைக்க அனுமதி கொடுக்காமல், அது இடைஞ்சலான இடம் என்று சொல்லிவிட்டு, அவர்களே அந்த இடத்திலே ஒரு சிலையை வைத்தார்கள். தி.மு.க. கோரிய இடத்திலே சிலையை வைக்க அனுமதி கொடுக்கவில்லை. அதற்குப் பிறகு இந்த ஆட்சி வந்தது. அதற்கு முன்பே, அனுமதி கொடுக்காவிட்டால், ஒரு போராட்டம் நடத்துவோம் என்று அறிவித்த பிறகுதான் சிலை வைக்க அனுமதி தரப்பட்டு, இந்த ஆட்சி வந்த பிறகு, அந்த இடத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அண்ணாவினுடைய சிலை வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தச் சிலை விவகாரங்களில், சில்லறைப் பிரச்சினைகளை எழுப்புகின்ற அந்த அளவுக்குக் கீழ்த்தரமான நிலை, இந்த அரசுக்குக் கிடையாது என்பதையும், சரியான இடமாக இருந்தால், உரிய இடமாக இருந்தால், அந்தச் சிலையை வைக்க அரசு அனுமதி அளிக்கும் என்பதையும்,

மற்ற துறைகளும் அனுமதி அளிக்கும் என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதிலே யாருடைய தலையீடும் இல்லை. வேண்டுமென்றே, எம்.ஜி.ஆர்.-உடைய பெயரைச் சொன்னால், எம்.ஜி.ஆர்.-உடைய சிலையை எடுத்து விட்டார்கள் என்று சொன்னால், அது இலாபமாக இருக்காதா என்று சிலபேர் கருதுகிறார்கள். அதற்குத்தான் இதைப் பயன்படுத்துகிறார்கள். ஏதாவது இவர்கள் ஒரு குற்றம் செய்துவிட்டால்கூட, இதை எம்.ஜி.ஆர். செய்யவில்லையா என்று கேட்டு, எம்.ஜி.ஆருக்கே இழுக்கை ஏற்படுத்துகிறவர்கள், இந்தச் சிலையை வைக்கிற காரணத்தினால், எம்.ஜி.ஆருக்குப் பெருமை தேடித் தரமுடியாது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சரியான இடத்திலே, சரியான முறையிலே, எந்தச் சிலையை வைப்பதாக இருந்தாலும், எந்தத் தலைவருடைய சிலையை வைப்பதாக இருந்தாலும், அரசு குறுக்கே நிற்காது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். திடீரென்று யாரும் அறியாமல், சொல்லப் போனால் — பச்சையாக சொல்லப்போனால் — திருட்டுத்தனமாக ஒரு சிலையை வைப்பது, அந்தத் தலைவருக்கே நாம் தருகின்ற மரியாதை ஆகாது என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்காட்டி, இந்த அளவில் என்னுடைய உரையை, விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

முற்பகல் 10-40

(ஆ) விஸ்கோஸ் தொழிற்சாலை மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் போராட்டம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, கோவை மாவட்டம் விஸ்கோஸ் தொழிற்சாலையை அதன் நிர்வாகம் மூடிவிட்டதால் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலை அலுவலகத்தின் முன்பு மறியல் செய்தபோது போலீசாரால் தடியடி நடத்தப்பட்டிருப்பது குறித்து 8 உறுப்பினர்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்களிலே கட்சிக்கு ஒருவராக நான் பேச அழைக்கவிருக்கிறேன். முதலாவதாக அந்தத் தொழிற்சாலை இருக்கும் மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பா. அருண்குமார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

***திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலுள்ள சவுத் இண்டியன் விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரில் அதிகப்படியான மாசுத் தன்மையிருப்பதாகவும் அதன் காரணமாக பவானிசாகர் ஆற்று நீரில் மாசு படிந்துவிடுவதாலும் மேற்படி பவானிசாகர் ஆற்று நீரைப்